

## மெட்ரோ ரெயிலில்

# 260 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயணம்

சென்னை, டிச.4-

உலக மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மாநில மாற்றுத்திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கரூர், சேலம், கோவை, நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள அரசு உதவிபெறும் சிறப்பு பள்ளிகளில் படிக்கும் வாய்பேச முடியாத, காதுகேளாத, மனவளர்ச்சி குன்றிய 260 மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளை எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையம் முதல் சென்னை விமான நிலையம் மெட்ரோ ரெயில் நிலையம் வரை அழைத்துச்சென்றது.

பின்னர் சென்னை விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு மாணவர்கள் அழைத்துவரப்பட்டனர். மாற்றுத்திறனாளி மாணவர்கள் உற்சாகத்துடன் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர். அவர்களுக்கு மெட்ரோ ரெயில் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வசதிகளை அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் விளக்கி கூறினார்கள்.